சார்பு நீதிமன்றம், குளித்தலை.

முன்னிலை: – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, குளித்தலை.

2025–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05–ஆம் தேதி வியாழக்கிழமை

இ.ம.எண்.13/2025 in அ.வ.எண்.97/2017

ஸ்ரீகுரு வித்யா பீடம், அதன் சார்பாக

டிரஸ்டி N.S.ராஜகோபாலன், . . . மனுதாரர்/முதல் பிரதிவாதி

**/எதிர்/**

ஸ்ரீ சப்தரிஷி ரிசர்ச் மற்றும் மெடிக்கல்

பவுண்டேசன், அதன் சார்பாக அதன்

டிரஸ்டி S.S. மணிகண்டன், . . . எதிர்மனுதாரர்/ வாதி

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் இம்மனு கட்டளை 9 விதி 7 சி.பி.சி ன்படி கடந்த 22.08.2017 ம்தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : 03.03.2025 |
| இறுதி விசாரணை செய்த நாள் | : 10.03.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : 05.06.2025 |
| மனுதாரர்/1 ம் பிரதிவாதிக்காக | : திரு.R.M.செந்தில் –வழக்கறிஞர் |
| எதிர்மனுதார்/ வாதிக்காக | : திரு.D.சீனிவாசன் – வழக்கறிஞர் |

1.மனுவின் சுருக்கம்

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் முதல் பிரதிவாதி. எதிர்மனுதாரர் /வாதியானவர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில் மனுதாரருக்கு 87

வயதாகிவிட்டபடியாலும், மனுதாரருக்கு வயது மூப்பின் காரணமாக பல்வேறு நோயின் தாக்கத்தினாலும், மனுதாரரால் எங்கும் எழுந்து நடமாட இயலாத சூழல் ஏற்பட தற்போது தான் கடந்த 22.02.2017 ம் தேதி மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சங்கதி தெரியவந்ததாகவும், ஏற்கனவே இரண்டாவது எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.249/2006 வழக்கானது தள்ளுபடி செய்யப்பட மேற்படி தீர்ப்பாணையை எதிர்த்து மே.மு.13/2018 என மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்ததாகவும்,இரண்டு வழக்குகளும் ஒன்றானவை என்பதால் குழப்பத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், ஆகையால் கடந்த 22.08.2017 ம்தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிருரையின் சுருக்கம்

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இம்மனுவை தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு எவ்வித தகுதியும் இல்லை. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் எப்போது சென்னையில் குடியிருந்தார், எப்போது திரும்பி வந்தார் என்பதற்கு எவ்வித விளக்கத்தினையும் தெரிவிக்கவில்லை. மனுதாரர் கல்வியறிவு அற்றவர் அல்ல. மற்ற பிரதிவாதிகளுடன் கூட்டுசேர்ந்துகொண்டு மேற்படி அசல் வழக்கில் தோன்றாதரப்பினராகியுள்ளார்.அசல் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணையில் மே.மு.13/2018 வழக்கினை விரைந்து முடிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரரை துன்புறுத்தவேண்டும் என்கின்ற

நோக்கத்திற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் மனுதாரர் அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5. எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் மனுதாரர் அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால் மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என வாதிட்டார்.

6. தீர்வு

(அ) இம்மனுவின் எதிர்மனுதாரர்/வாதியானவர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் உட்பட மூவர் மீது அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படிஅசல் வழக்கில் மனுதாரர்/முதல் பிரதிவாதியானவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் அவருக்கு எதிராக கடந்த 22.02.2017 ம்தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்னிட்டு மற்ற பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட மேற்படி அசல் வழக்கில் 24.10.2018 ல்

வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு சாட்சிய விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் இ.ம.எண்.3/2022, 5/2022, 6/2022 என மனுக்கள் தாக்கல் செய்யப்பட மேற்படி மனுக்கள் வெவ்வேறு தேதிகளில் முடிக்கப்பட (Allowed, Dismissed, Closed) இ.ம.எண்.6/2022, 16.07.2024 ம்தேதி முடிக்கப்பட அசல் வழக்கானது எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.40 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் மனுதாரர் /பிரதிவாதிக்கு எதிராக கடந்த 22.02.2017 ம்தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மனுதாரருக்கு 83 வயதாகிவிட்டபடியால் அவருக்கு மேற்படி வயது மூப்பின் காரணமாக ஏற்பட்ட உடல்நல குறைவிற்காக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறே மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு ஆதரவாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. தரப்பினர்களால் எழுப்பட்டுள்ள இதர சங்கதிகளை பொறுத்து இம்மனுவில் இத்தருணத்தில் விரிவாக விவாதிக்க இயலாது. அவ்வாறு விரிவாக விவாதிக்கும் பட்சத்தில் அசல் வழக்கின் விசாரணை பாதிப்படையக்கூடும். இருப்பினும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை. மனுதாரர்/பிரதிவாதியின் மீதான வழக்கினை எதிர்கொள்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியம். இருப்பினும் இம்மனுவானது காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என முடிவுசெய்யப்படுகிறது.

முடிவாக இம்மனுவின் மனுதாரர்/பிரதிவாதியானவர் மனு செலவுத்தொகையாக ரூ.2500/- யை வருகின்ற 26.06.2025ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் எனவும், தவறும்பட்சத்தில் இம்மனு தாமாக தள்ளுபடி ஆகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 27.06.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்துத்தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 05-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

E MUTHUSAMY
Digitally signed by E MUTHUSAMY
Date: 2025.06.05 17:21:22 +0200

சார்பு நீதிபதி,
குளித்தலை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவனம்: இல்லை.

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவனம்: இல்லை.

E MUTHUSAMY
Digitally signed by E MUTHUSAMY
Date: 2025.06.05 17:21:30 +0200

சார்பு நீதிபதி,
குளித்தலை.

================================

சார்பு நீதிமன்றம், குளித்தலை

I.A.NO.13/2025 in O.S.No.97/2017

தேதி:05.06.2025

AFT–IA

வரைவு / செவ்வை உத்தரவு

================================